உ

சிவமயம்.

தருமருக்கு பீஷ்மாச்சாரியார் உபதேசித்த

சகாதேவசாஸ்திரம்.

சகுனப்படலம், மரணக்குறிப்பு,

பல்லிசாஸ்திரம்

இந்நான்கு மடங்கியிருக்கின்றன.

இஃது,

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியா

ரவர்களால் இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

எமது அச்சுக்கூடத்தில் விற்பனைக்குத்தயாராயிருக்கும்

புத்தக விளம்பரம்.

இராமாயணம் கிளேஸ் 2-வாலியம் ஒஸ்திபதிப்பு	4	0	0
சாதாரண பாரதம் 4-வாலியம்	4	0	0
இந்துலா [அச்சிலிருக்கிறது]	4	0	0
சோதிடசிகாமணி ஒஸ்திபதிப்பு	3	8	0
இங்கிலீஷ், தமிழ் வைத்தியசிகாமணி ஒஸ்திபதிப்பு	3	0	0
இந்தியன் பீனல்கோட் ராயல் ஒஸ்திபதிப்பு	3	0	0
கிராம முனிசிப்கோர்ட் ராயல் கிளேஸ்	3	0	0
கிரிமினல்கோர்ட் சட்டம் [அச்சிலிருக்கிறது]	2	0	0
பிரபஞ்சவுற்பத்தி ஒஸ்திபதிப்பு	2	0	0
சாதாரண இராமாயணம்	1	8	0
உலகவிசித்திரக்கதை ஒஸ்திபதிப்பு	1	0	0
விக்கிரமாதித்தன் கதை கிளேஸ்	1	0	0
பதிவிரதைகள் சரித்திரம்	0	12	0
விராடபர்வம் ராயல் 8-பேஜ் லெத்தோபடத்துடன்	0	12	0
பட்டணத்தார்புராணம் ராயல் 16-பேஜ் லெத்தோபட	0	12	0
பார்வதிபரணியமென்னும் விஷவைத்தியசிந்தாமணி	0	12	0
நஷ்டஜாதகம் கிளேஸ்	0	8	0
நவகண்ட ஆரூடம் கிளேஸ்	0	8	0
மூலிகைமர்மம் கிளேஸ்	0	8	0
திருத்தணிகைச் சன்னதிமுறை திக்கு	0	8	0
சரீரசாஸ்திரம் கிளேஸ்	0	8	0
சிவவாக்கியம் 1000-ம்பாடல்கள் கிளேஸ்	0	8	0
மனமோகனக்கண்ணாடி கிளேஸ்	0	8	0
ஜெகத்ரக்ஷா கிளேஸ்	0	8	0
புலவுநூல் இந்தியா சமையல்சாஸ்திரம் கிளேஸ்	0	8	0
கண்கட்டுவித்தை	0	6	0
ஷை 2-ம் பாகம்	0	6	0
சகாதேவர் சோதிடநா	0	6	0
திருநேத்திரசிந்தாமணி	0	5	0
பெண்கள் ருதுஜெனனஜாதகம்	0	4	0
சர்வபிரயாண சகுனசாஸ்திரம்	0	4	0
அகடவிகட சம்சாரி	0	4	0
வாந்திபேதி நிவாரணு	0	2	0
சுருக்குபஞ்சபட்சி	0	2	0
சைவானுஷ்டானவிதி	0	2	0
அவிவேகபூரணகுருகதை	0	1	6
விபூதி ருத்திராட்ச மகத்துவம்	0	1	3

இப்படிக்கு,

சிறுமணவூர்-முனிசாமிமுதலியார்,

நெ. 12. சட்டண்ணநாய்க்கன் வீதி,

தூனா போஸ்டு, மதராஸ்.

உ

தெய்வமேதுணை.

மரணக்குறிப்பு.

உலகமதில்மானிடராய்ப்பிறந்தபேர்க ளுண்டுபசியாறிநித்ரை செய்யும்போது, பலவிதமாய்சொற்பனங்கள்கண்டுபின்னே பலன் தெரியமாட்டாமல்விழிப்பதாலே, ஜலமதனைதிருமுடியில்தரித்தயீசன் தானீன்றகணபதியின்தாளைப்போற்றி, கலக்கமதுநேராமல் பலனைக்கூற கலையளித்தகுருமுனியுங்காப்புதானே. 1

மரணம்வருங்காலமதைத்தெரிந்துக்கொள்ள மைந்தனேசொல்லுகிறேன்மதியைநாட்டு, கெர்மவதுகொள்ளாதேவீண்பேசாதே கேவலமாய்நினையாதேபழிதேடாதே, ஒருவழியேநீநடந்துபோகும்போது வுன்னிழலேயுனக்குதெரியாதிருந்தால், வருகுமடாசாவுனக்குவருஷங்கெட்டிவாய்கொழுத்துத்திரியாதேவழியைத்தேடு.

பாரப்பாகினவிலேகண்ணுடியேந்தி பார்க்கையிலேசென்னியதுகாணவிட்டால், நீரப்பாபூசியபண்டாரந்தன்னை நீச்சன்வந்துமயிர்பிடித்துயிழுக்கக்கண்டால், தூரப்பாசெய்குரங்குசெந்நாய்வேங்கை துஷ்டர்களாம்ராட்சதனைதினமுங்கண்டால், யாரப்பாவருஷத்தின்மேலிருப்பார் நமன்றாதுவிடுமென்றஞாலமில்லை. 3

தேடென்றால்ஊரெல்லாந்தேடவேண்டாம் தெருவழியாய்நீநடந்துபோகும்போது, ஓடுகின்றசூரியனுன்கண்ணுக்கப்பா ஒளிமயங்கிவளயம்போல்காணுமாகில், ஆடுகின்றவுன்கூத்துபத்தேமாதம் அரணைசாவுனக்குவுண்மையப்பா, வீடென்றுமக்கள்மனைவாசலென்றும் வீம்பிட்டுத்திரியாதேவேதம்பாரே. 4

பாரிலேநீநடக்கும்போதுவுந்தன்பார்வைக்குவுன்சிரசுயிரண்டுபோலே, சேருமுந்தன்நிழல்தனிலேதோற்றுமாகில் சாவுனக்கிருக்குதப்பாயெட்டாமாதம், மாறுகின்றகினவில்வானரமுங்கழுதை மனையிடத்திலேயிருந்தாலாறேமாதம், கூறுகின்றஆந்தைநாய்பன்றிமூன்றுங் குலைத்துன்னைதுரத்திவந்தால்ரெண்டேமாதம். 5

மாதவத்தால்வந்தமானிடனேகேளு மன்டையிலேபிரம்மனவர்கீறிவைத்த, தோதகம்போல்சொர்ப்பனங்கள்சகுனமெல்லாம் தோற்றுமடாவஞ்சாதேபின்னங்கேளு, யேதேதைப்பார்த்தாலும்

ஒன்றுபத்தா யிடக்காகச்சிதறியேகண்கூசுமாகில், மாதமதுஒன்
றுக்குமரணமுண்டா மைந்தனேசெய்தவினைபாசமாச்சே. 6
இட்டமுடன்தனிவழியேசெல்லும்போது யேலாமற்படுகுழி
யில்வீழக்கண்டால், சட்டனவேதலைவிரித்துதேங்கக்கண்டால்சண்
டனிடதிசைநோக்கிநடக்கக்கண்டால், பொட்டனவேஒருவன்கல்
லாலடிக்கக்கண்டால் போக்குநதிசமுத்திரங்க ளூலரக்கண்டால்,
விட்டகலும்அவனுயிரோர்திங்கட்குள்ளே வியாழபகவானுரைத்த
வேதம்பாரோ. 7
ஆச்சென்றுநினையாதேவப்பாகேளு ஆறுகுளம்தனில்மூழ்கி
ஸ்தானஞ்செய்து, பூச்சென்றதுணியெடுத்துதுடைக்குமுன்னே பு
டம்போலேமார்புவந்துயெரியுமாகில், ஆச்சப்பாசாவுனக்குபதினை
ந்தாநா ளாணையுடனேயுரைத்தேனறிந்துகொள்ளு, பேச்சென்று
நினையாதேவினைதேடாதே பொல்லாதயின்னமொருகினவுகேளு.
கேளப்பாயெண்ணையிட்டுஅரப்பெடுத்து கையிலேசிகப்புநிற
பூவெடுத்து, ஆளப்பாகருத்தவனும்நீயுமாக ஆடையதுசிகப்புடுத்
திதெற்கேபோனால், நாளப்பாபத்தாநாள்மரணமாவாய் நாதாக்க
ள்சொன்னதிதுபொய்யாகாது, கோளப்பாபோய்யென்றுமடைய
ர்சொல்வார் (நாளை) குழியென்றநரகத்திலமருவாரே. 9
வாறுகயின்னமொருகினவைக்கேளு வளவென்றவீட்டில்நீயி
ருக்கும்போது, தூராகவெரிகின்றவிளக்கின்வத்தி துண்டாகவெ
ட்டினதுபோலேமைந்தா, சிராகசுடரொல்லாம்கீழேவீழ்ந்து ஸ்தம்
பமதுமுண்டம்போலிருண்டிருந்தால், நேராகஐந்தாநாள்மரணமா
வா னம்பாதமடையருக்குநரகமேழே. 10
ஏழென்றநரகமதுபாவிக்கப்பாயின்னமொருபொல்லாதகின்
வுகேளு, பாழானபறவையிலேபருந்துகாக்கை பாலகனேயுன்முக
த்தில்குத்துமாகில், சூழ்ந்துதடாமரணமதுநாலாநாளில் சொற்ப
மெனநினையாதேதப்பிராது, வீழாமல்வெகுநாளைக்கிருப்பேனெ
ன்று வீண்மூடுக்குபேசாதேயின்னங்கேளு. 11
இன்னங்கேளுன்னுடையகண்ணுக்கப்பா யிரண்டுமுழங்கால்
முதற்பாதமட்டும், என்னவிதமாகநீபார்த்தபோதுமில்லாமல்மொ
ண்டிதம்போல்கண்டேயானால், சொன்னோயிரண்டேநாள்மரண
மென்று சுப்ரமணியாகஸ்தியர்க்குபதேசித்தார், தனையடுத்ததர்ம
ருக்குபீஷ்மர்சொன்னா தம்பியாமர்ச்சுனர்க்குகருமர்சொன்னார்.
தர்மமென்றஒருவாக்கைமறந்திடாதே தன்னைத்தானேபுகழ்
ந்துவெறிகொள்ளாதே, கர்மிகளேயின்னமொருகினவுகேளு கருத்
தபெண்நலைவிரித்துசிறித்துகொண்டு, சரசமாய்பேசியுந்தனருகே
வந்து சடுச்சென்றுதோளின்மேலேறிக்கொண்டு, எருமைபோல்
கூச்சலிடக் கண்டுவிட்டா லிரண்டாநாள்நீயிருந்தாலீசன்தானே.

கனவின்சாஸ்திரம்.

தானென்றயானையுடன்குதிரைக்கூட்டம் தர்மகதைபூஞ்சோ
லைசங்குதீபம், பானுவுடன்சந்திரனைகினவிற்கண்டால் பரித்திதனை
க்கண்டாலுமான்கண்டாலும், கோனென்றதேவர்முதல்மலைகண்
டாலுங் குறைவில்லைகடைந்தமோர்தனைக்கண்டாலும், வீணல்லப
ன்னிரண்டுமுத்தமந்தான்விபரமாய்சொல்லுகிறேனின்னங்கேளே.

கேளேநீ அத்திபுளிஆலைபுன்னை கனியுள்ளவிருட்சமதி லேறி
னாலும், தேளதனைக்கண்டாலும்நல்லசற்பம் தெளிவாகபடம்விரித்
தாடினாலும், மேலானதிரோகமதிலெறும்புக்கூட்டம் மொய்த்தி
டவேகண்டாலும்நடைகண்டாலும், நாளுக்குநாளதிக பலனுண்
டாகும் நல்லதப்பாமலமதனைக்கண்டிட்டாலும். 15

ஞாயமென்றமழைபொழியக்கண்டிட்டாலும்நல்லபுதுஆடை
தன்னையுடுத்தினாலும், தூயவெள்ளைதுயில்பூண்டபெண்கண்டாலு
ந் துரையென்றவரசர்களையெதிர்த்திட்டாலும், மைவிழியாள்வே
சியகம்புகுந்திட்டாலு மலையேறிவழிநடக்கக்கண்டிட்டாலும், ஐ
வர்கதைகேட்டாலும்வாசித்தாலும் அரசனுக்குண்டானசுகம்அ
டையலாமே. 16

மேதினியில்ஒருவன்வந்துஅழைத்தபோது மயிரற்றஓர்தலை
யிலெண்ணைவார்க்க, காதலாய்வானரத்தின்முதுகிலேறி கடுகியே
வழிநடக்கவிருந்துவுண்ண, தாதுவற்றுவிழுந்தபிணந்தனைமிதிக்க
தலையிலேபுல்விறகுசுமையெடுக்க, சாதகமாயிதுகளைநீகண்டையா
னால் சத்ரரதிபோல்வியாதிசதைக்குஞ்சொன்னேன். 17

மைவிழியாள்தனைக்கூட்டிவடக்கேபோக மஞ்சள்வெற்றிலை
பாக்குவிலைக்குவாங்க, கைதனிலேஆகாயம்எட்டக்கண்டால்கடல்
சூழ்ந்தவுலகாளுமரசனாவான், துய்யஇளநீர்குரும்பைகரும்பைக்க
ண்டால் தோஷமில்லாஆண்பிள்ளைபிறக்குமப்பா, பையனவேசோ
லைசென்றுமலரைக்கொய்தால் பெண்குழந்தைஜெனிக்குமடாபே
தமில்லை. 18

இல்லையென்றகாகமதைகினவிற்கண்டா லேகுமடாசெல்வம
துயன்றிகண்டால், தொல்லையடாவருமையதுமிகுதியாகும் தோ
ஷமடாயெருமைநாய்பருந்துகண்டால், நல்லதல்லகைம்பெண்ணை
புணரக்கண்டால் நாளுக்குநாளப்பாநாசமாவாய், இல்லறத்தைநீக்
கியாண்டியாகக்கண்டால் யென்னசொல்வேனுன்சுகத்தையின்னந்
தானே. 19

தானிருக்கும்வீடுபத்தியெரியக்கண்டால் தங்கமதுயுன்கையி
ல்சிறிக்குமப்பா, கானகத்தில்வேட்டையதுஆடக்கண்டால் கண்ம
ணியேவாகனங்கள்வந்துசேரும், வானமதுயிடிந்துவிழக்கண்டை
யானால்வல்விசனத்தாலழுகைவந்துமாறும், ஊனமடாவிவாகமது
செய்யக்கண்டா லுன்மனதில்சந்தேகம்வந்துதீரும். 20

கு ம் மி.

கனவில்செருப்பைநீ கண்டாலும்-உந்தன்-காலுக்குப்பூண்டு நடந்தாலும், மனதில்கவலை யகலுமப்பாநகர்-மன்னனைப்போலே சுகித்திருப்பாய். 1

ஆண்டியாய்போகநீ கண்டாலும்-எந்த-ஆலயம்போய்வரக்க ண்டாலும், வேண்டியபந்துக்கள் பகையாகக்கண்டாலும்-விட்ட பொருள்கூட கிட்டுமடா. 2

தூரதேசங்களிற் போயிருந்தோரப்பா யீரத்துணியுட னே நடந்த, சேரவரக்கினு கண்டாயானலந்த-கோரத்தையென்னென் று சொல்வனடா. 3

கடலின்வழியாக தோணியில்ஸ்டீமரில் - கண்காணுதேசங் கள் போனதுபோல், பகலில்ஒருகினு கண்டயானுன்கை-பட்ட தெல்லாந்தங்க மாகுமடா. 4

நரகில்சரக்கி விழுந்திடவுமந்த-நரகலேஆடையெல் லாம்பட வும், நரகிலுடம்பெல்லாம் பூசக்கண்டால்வெகு - நாளாய்துடர் சநி விட்டுதடா. 5

அம்புகள்ஈட்டிகள் பல்லயங்கத்தியும் - ஆடிக்கொண்டெதிரி ல் வந்தாலும், வம்புசெய்ராக்ஷதர் ஏவல்கண்டாலப்பா - வாய்க்கு மரணமவ் வேளையிலே. 6

ஆடையிலக்கினி பட்டிடக்கண்டாலும்-ஆரண்யம்பத்திஎரி ந்தாலும், கூடுமுறவுபெண் புத்தியறிந்திடுங்-கொஞ்சமுஞ்சந்தேக மில்லையடா. 7

அந்தணன்செத்து மடிந்திடக்கண்டாலும்-யானைத்தவறிவிழு ந்தாலும், உந்தனுக்குமூத்தோர் யாருக்கோமரணம்-உண்டெனச் சொல்வது உண்மையடா. 8

காசிக்கிப்போய்வரக் கண்டாலும்பெருங்-காட்டிலலைந்திடக் கண்டாலும், யீசனருளால் ஒருகுறைவில்லாமல்-யென்றுஞ்சிரஞ் சீவி யாயிருப்பாய். 9

தருமருக்குபாட்டன் பீஷ்மாச்சாரியார் - தானுரைத்ததர்ம சாஸ்திரத்தை, சிறுமணவூர்வாழ் முனிசாமிகண்டு - செப்பினன் யாவர்க்கும் வேணுமென்றே. 10

கனவின்சாஸ்திரம்-முற்றிற்று.

கடவுள் துணை.

பிரயாணசகுனப்படலம்.

திங்களொடு சனியிரண்டுங் கிழக்கேயாகா
 தெற்குமுகம் போகவென்றால் வியாழமாகா
அங்ஙனவே வடக்குமுகம் பிரயாணந்தான்
 அப்பனே செவ்வாயும் புதனுமாகா
தங்குகின்ற யிடமிருந்து மேற்கேபோகத்
 தம்பியடா வெள்ளியிலே யாகாதாகா
இங்கிவைகள் சிவனார்கை சூலமாகும்
 ஏற்காநாள் போகவென்றாற் சூட்சங்கேளே.

(இ-ள்,) திங்கள்-சனி-கிழக்கு, செவ்வாய்-புதன்-வடக்கு, வியாழம்-தெற்கு, வெள்ளி-மேற்கு; ஆகிய நாலுதிசைக்கும் கூறிய வாரங்களில் சிவன்கைச்சூலம் எதிரரகையால் யாத்திரை முதலான யாதொரு பிரயாணங்களும் கூடாவாம். அப்படி ஆகாத வாரங்களில் சென்றே தீரவேணுமான நிர்ப்பந்தப்பிரயாணம் நேரிடுமாயின் ஒவ்வொருநாளுக்கும் பரிசுத்தநாழிகை மூன்றேமுக்காலில் அமிர்தயோகக்கடிகை முன்னோரி லொருவர் கூறுகிறார்.

வெண்பா.

வடக்குதயம்சென்றதுகால் வாழ்கிழக்கோடுச்சி
அடுக்குநமன்திசைக்கோ டந்தி—கொடகீழ்
நடுராவிற்சென்றதுகால் நாள்பார்க்கவேண்டாங்காண்
விடிவில்லா தென்றேமகிழ்.

(இ-ள்,) வடக்கே போகவேண்டுமானால் கதிரவன் உதயமான கால்நாழிகைக்குள்ளாகவும், கிழக்கே போகவேண்டுமானால் சூரியன் உச்சியில்வந்து குடைபோலிருக்கும்போதும், தெற்கேபோகவேண்டுமானால் சூரியன் மேற்கடலில் புகுவமுன்னும்பின்னுமாயிருக்கும்போதும் மேற்குமுகம் போகவேண்டுமானால் அர்த்தராத்திரியாம். இவ்விதப் பிரயாணஞ் செய்பவர்களுக்கு எந்த வாரமானபோதிலும் சந்தேகமில்லாமல் சத்தியமாய் நடக்கலாந் தோஷமில்லை.

வாரசூலை பார்க்கவேண்டிய அவசியமே இல்லையாம்.

சுபசகுனங்கள்

மஞ்சளுங்குடைவெண்சாதம் மலர்ச்சரம்தீபம்சங்கு
வஞ்சிமங்கிலியமாது வண்டுபொன்விசிரிவளையல்
கொஞ்சியகிளியுமானுங் கெருடனுங்கரும்புதேனும்
மிஞ்சிநீடக்கலிம்மா ரெதிற்படல்மிகநன்றாமே.

(இ-ள்,) மஞ்சள்-குடை-வெண்சாதம்-புஷ்பம்-தீபம்-சங்கு மங்கிலியப்பெண்-வண்டு-பொன்-விசிரி-வளையல்-கிளி-மான் -கெருடன்-கரும்பு-தேன் இவைகள் சுபசகுனமாம், கெருடன் வட்டமிட்டாலும் எதிராகவந்தாலும் அல்லது பிரயாணப்படும்போது குரலோசைக்கேட்டாலும் மிகநன்றாம்.

பாலொடு பழமுஞ்சாணம் பசுவிளநீருகன்னி
நூலணியிரட்டைப்பார்ப்பார் பல்லக்குநீர்க்குடங்கள்
மாலொளிர்ரசக்கண்ணடி மாவிலைபெருவின்கூடை
சாலவிச்சகுனமெல்லாம் சான்றவர்சுகமென்றாரே.

(இ-ள்,) பால்-பழம்-சாணம் பசு-இளநீர்-கன்னி-இரட்டைபிராமணர்கள்-பல்லக்கு-நீர்க்குடம்-ரசம்பூசின கண்ணடி-மாவிலை - எருவுக்கூடை சுபசகுனமெனப் பெரியோர் கூறுகிறார்.

வெண்ணையுந்தயிருமோரும் வேசியுமழுக்குமூட்டை
மன்னர்சந்தனமும்பெட்டி மாதரின்கூட்டமும்சங்கு
பொன்கொடிகுழந்தையேந்தி பொரிமயில்பரிமளங்கள்
இன்னவாரெதிரிற்கண்டு மேகெனப்பெரியோர்சொன்னார்.

(இ-ள்,) வெண்ணை-தயிர்-மோர்-வேசி-வண்ணான்-அழுக்குமூட்டை அரசர்கள்-சந்தனம்-பெட்டி-பெண்கள்கூட்டம் - சங்கு-பொன்னகை-கொடி-குழந்தையேந்தினவர்கள்-பொரி-மயில்-பரிமளவஸ்துகள் சுபம்.

மாமிசயிறைச்சிவண்ணான் மலரதுமுடித்தமங்கை
காமனுறிறந்தமாதாம் கைம்மனையிருவர்யானை
சுவாமிதேர்திருவிழாக்கள் சர்ஜனர்பஜனைக்கூட்டம்
நாமிதைக்கண்டேபோக நல்லதென்றுரைத்தார்முன்னோர்.

(இ-ள்,) மாமிசம்-இறைச்சி-வண்ணான்-பூமுடித்த பெண்-இரட்டைவிதவைஸ்ரீகள்-தேர்திருவிழாக்கள்-பஜனைக்கூட்டமும்-சுபம்.

நடந்தவன்காலைச்சேர்ந்து நாயதுமுகந்திட்டாலும்
தொடர்ந்தவன்முன்னாலோடித் துரிதமாய்சென்றிட்டாலும்

அடர்ந்தவன்முகத்தைநோக்கி ஆவெனக்குலைத்திட்டாலும்
கடந்தவெப்பொருளானாலும் கைக்கூடுமென்றார்முன்னோர்

(இ-ள்) பிரயாணப்படும்போது நாய்வந்து காலைமுகர்ந்தாலும், முன்னதாக ஓடினாலும், முகத்தைப்பார்த்துக்குலைத்தாலும் மிகவுத்தமமாம், ஆனால் அடித்துத்துரத்தினபோதிலும்போகாமல் பெருகுரலாய் குலைத்தால் பொருள்நஷ்டமும் அபாண்டங்களும் ஆபத்துகளும் வருமாம் அந்தப்பிரயாணங் கூடாவாம்.

தருவிளங்கன்றுநல்லத் தாமரைமலருஞ்சலமும்
விருந்துண்டுவருதல் வெண்சாமரைபலகாரம்நாற்று
வருதல்நன்றெனவேமுன்னோர் வரைந்தசொற்றமிழால்செய்
சிறுமணவூர்வேளாளச் சேய்முனிசாமிதானே. [தோன்

(இ-ள்) பூஞ்செடியின் கன்றுகள் தாமரைமலர்கள் சலம் விருந்துசாப்பிட்டு வருகிறகூட்டம் வெண்சாமரை பலகாரம் தான்னிய முதலானநாற்றுகட்டுகள்வருதல் நல்லதென்று முன்னோர்கூரிய வாக்கியங்களை பாடலாகச்செய்து அச்சிட்ட அன்பன் சிறுமணவூர் வேளாளவம்மிசத்திலுதித்த முனிசாமிமுதலியார் என்றறிவீர்.

அவசகுனங்கள்.

வேசியன்புதல்வன்மொட்டை விரிதலையானபேர்கள்
தூசியின்வெளுத்தமுட்டை துணிந்தசொல்பகருங்கூட்டம்
வாசிகோடயுங்கத்தி வகையிருப்பாயுதங்கள்
பேசியவிதுகளெல்லாம் பார்த்துநீ நடக்கொணாதே,

(இ-ள்) வேசியின்பிள்ளைமொட்டைத்தலையர் தலைவிரித்தும் ஆற்றியும்வருதல் சலவையான துயில்மூட்டை சண்டையோடுவருகிறகூட்டம் வாசி கோடாரி கத்தி கெட்டப்பாறை மண்வெட்டி அரிவாள் உளி இதுகளைப்பார்த்து நடக்கக்கூடாவாம்.

வீட்டுக்குதூரஸ்திரீயு வேடனுமெண்ணைப்பானை
காட்டில்வாழ்குரங்கும்பாம்பு கண்தெரியாதபேரும்
ஆட்டினம்கழுதைப்பன்றி ஐயையோவென்றசத்தம்
கேட்டுனீனடந்தையாகில் கெடுதியாமென்றுசொன்னார்.

(இ-ள்) வீடுதூரமானவள் வேடன் எண்ணெய்ப்பானை குரங்கு பாம்பு குருடர்கள் ஆடுகள் கழுதை பன்றி ஐயையோவென்கிற சத்தம் ஆகா-எ-று.

உப்பிலாவேனம்பஞ்ச உதிரமுங்கண்டபேர்கள்
கப்பியமுக்காடிட்டோர் கைதனில்நெருப்புள்ளோர்கள்
செப்பியகழுகைந்தாடிக் குரவர்கள்வேசிக்காரர்
இப்படியெதிரிலாகா தென்றனர்பெரியோர்தானே.

(இ-ள்) உப்பிலாதபேனம் பஞ்சமூட்டை முக்காடிட்டவர் நெருப்பு மோடிவித்தைபாடுகிறவன் குரவர் பகல்வேஷக்காரர் ஆகா எ-று,

கூனனும்காவிவேஷ்டிக் கொண்டவன்முடவன்ரோகி
பானையில்புதியபானை படைதொழிலாளிபாப்பான்
வீணனும்பேடிபேணி விரகிடசுமையுந்தோலும்
காணவேபோனவேலை கஷ்டமாமென்றுசொன்னார்.

(இ-ள்) கூனன் பண்டாரம் முடவன் நோயாளி புதுப்பானை யுத்தத்தொழிற்காரன் வித்தைப்பாப்பான் பேடி பேணி விரகுசுமை ஆடு மாடுமுதலிய சரமம்வரில் ஆகா-எ-று,

ஒருகுரலமுகக்காடை யுடையிலான்தேகியென்று
வருபவன்கருமான்குயவன் வடக்கயர்பெருமைத்தும்பு
மருந்தளித்திடுவோனான வயித்தியன்குஷ்டரோகி
வருகையிலெதிர்சென்றக்கால் வருத்தமேவிளையுமென்றார்,

(இ-ள்) ஒற்றைக்குரலமுகை காடை ஆடையில்லாதவன் பிச்சைக்காரன் கருமான் குயவன் வடக்கயர்எருமைக்கிடா தும்பு வயித்தியன் குஷ்டரோகிவரின் ஆகா-எ-று,

கொலைதொழில்செய்யும்பேர்கள் கூந்தலில்லாதமாது
வலைதனைபிடித்தோன்சாணான் வணிகனும்வாளையேந்தி
குலைக்கலாமெதிரில்நாய்கள் கூடினுங்குருக்கிட்டாலும்
நிலைத்தவெத்தொழிலானாலு நீங்கிடுமென்றுசொல்லி

(இ-ள்) கொலைத்தொழில்செய்கிறன் கூந்தலில்லாதபெண் வலைவீசுகிறவன் சாணான் வாணியன் வாள்பிடித்தவன் நாய்குலைக்காமல்எதிர்ப்படுதல் அல்லதுகுருக்கிடுதல் ஆகா-எ-று,

வலமாகபோகவேண்டியதுகள்.

பசுவொடுபுலியும்பானை பரிமளப்புனுகுபூனை
முசலொடுகோழிக்கள்ளிக் காக்கையுமந்திநாரை
விரையெனநரியும்புள்ளி மான்சுபமாதுகொக்கு
நிஜமிதுவலமாய்வந்தால் நினைத்ததுஜெயமாங்கண்டாய்

இடமாகவரவேண்டியதுகள்

காட்டில்வாழெருமைப்பன்றி கரடியுங்குரங்குமூஞ்சூர்
ஒட்டமாம்நாயும்பூனை உடும்பொடுகீரிப்பிள்ளை
ஆட்டினக்கிடாவுமட்டை அரிவபரெவராலும்
வாட்டமாமிடதுபக்கம் வந்திடில்மிகவுநன்றாம்

நிலமதிற்றிசைகள்நான்கில் நேரிடும்நடைகளுக்கும்
வலமிடப்பலனுமெதிரில் வரும்பலனைவையுங்கோர்த்து
தலமதிற்சிறுமணவூராந் தகைமைவேளாளனென்சீர்
குலமுனிசாமிவாக்கால் கூறியபடந்தான்முகிவே

விருந்துண்ணல்.

திங்கள் புதன் வெள்ளி சனி நன்று. மற்றதினங்களிலாகாது.

கோடியுடுத்தல்.

புதன் வியாழம் வெள்ளி இந்ததினங்களில் கோடிவஸ்திரம்தரிக்கத்தகுந்த காலம்.

சயனித்தல்.

கிழக்குமுகம் சிரசுவைத்து படுத்தால்ஐசுவரியம் தெற்கு ஆயுள்தனமும்விர்த்தி மேற்கு பிரபலம் விர்த்தி வடக்கு மிருத்தியுமாகும் தானிருக்குமிடம் தெற்கு மாமியார்வீட்டிற் கிழக்கு யாத்திரைக்கு மேற்கும் சிரசுவைத்துபடுத்தால் சுபம் எப்பொழுதும் வடதிசையில் வைக்கலாகாது.

க்ஷௌரம் செய்துகொள்ளல்.

ஆடி புரட்டாசி மார்கழி மாசிமாதங்களில் ஞாயிறு செவ்வாய் சனிவாரங்களிலும் க்ஷௌரம்கூடாது.

உ

கடவுள் துணை.

பல்லி விழும் பலன்.

சொற்பனத்தின் விபரமதைக் கேட்டமைந்தா
சொல்லக்கேள் பல்லியது சிரசில்வீழ்ந்தால்
தற்காலம் ஒருகலகம் வந்துநேரும்
தயங்காதே முகமதனில் வீழுமாகில்
உற்றபவுபந்து தரிசனமேயாகும்
உதவயடா அரசரால் புருவமீதே
கைப்பொருள்தான் விரையம் மேலுதட்டில்வீழ்ந்தால்
கண்மணியே கீழுதடு வெகுலாபந்தான் 1

வெகுலாபம் வலதுசெவி ஆயுசுண்டாம்
வியாபார லாபமிடச் செவிதானப்பா
முகக்கட்டை தண்டனையாம் வேந்தராலே
முழங்காலுக் கதிகசுகம் வீண்போகாதே
சிகயிலே மிருதிபயம் நேத்திரந்தான்
செல்லவைக்கு மிருந்தவிடம் விட்டுவேறே
சுகமினிய பரஸ்திரீயைப் புணர்வாயப்பா
சொல்லரிய இடதுபுஜ மீதில்வீழ்ந்தால் 2

தன்னுடைய வலதுபுஜம் ஆரோக்கியந்தான்
ஸ்தனங்களிலே பாப சம்பவந்தானப்பா
பொன்பொருள்தான் வருக்கையடா வயற்றில் வீழ்ந்தால்
பிரயாணங் கூட்டுமடா பாவந்தானே
பின்னமாக் கண்டமதில் வீழுமாகில்
பேசினேம் சத்துருக்கள் நாசமாவார்
பெண்குறிதான் தனலாபம் ஆண்குறிக்கி
பேசுதடா தரித்திரமென்று பெரியோர்நூலே. 3

பல்லிசாஸ்திரம்—முற்றிற்று.